ஜாக்சன்வில் தமிழ் பள்ளியின் பருவ இதழ்

# மயிலிறகு

வாழ்க தமிழ்! வளர்க தமிழினம்!

மயில் 3 இறகு 1, 09-05-2021

## சித்திரம் பேசுதடி..



## ஃபெட்னா போட்டிகளின் முடிவுகள் 2020-2021 & இறுதி சுற்று பங்கேற்பாளர்கள்

# பதிப்பாசிரியர் குழுவிடமிருந்து

**அனைவருக்கும் வணக்கம்**!

2021-22 ஆம் கல்வி ஆண்டில் உங்கள் அனைவரையும் மீண்டும் சந்திப்பதில் மயிலிறகு பெரும் மகிழ்ச்சியடைகிறது.கொரோனா பேரிடர்காலம் தொடர்ந்து நம்மை அசச்சுறுத்திக்கொண்டுருக்கிறது, ஆனபோதிலும் நாம் நம் பணிகளை தொடர்ந்து செய்ய சரியான பாதுகாப்பு வழிகாட்டுதல்களை முறையே பின்பற்றி பாதுகாப்புடன் இருக்குமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

மயிலிறகு பத்திரிக்கைகான பங்களிப்பும், வரவேற்ப்பும் அதிகரித்து வருவது குழுவிற்கு பெரும் மகிழ்ச்சியையும், உற்சாகத்தையும் அளிக்கிறது. மேலும் இதில் மாணவர்களுடன், பெற்றோர்களும் உங்களுடைய படைப்புகள் கவிதை, கட்டுரை என மயிலிறகில் பதிக்குமாறு கேட்டுக்கொள்கிறோம்.

பதிப்பில் உள்ள சில தகவல்கள் மட்டுமே இணைய தளத்தில் எடுக்கப்பட்டவை, மற்ற அனைத்தும் முற்றிலும் சுயமாக உருவாக்கப்பட்டவை. எனவே இந்த இதழுக்கு சற்று நேரம் ஒதுக்கி, தாங்கள் தங்கள் குழந்தைகளுடன் படிக்கும் படி அன்பாக கேட்டுக் கொள்கிறோம்.

வெளியிட உதவி புரிந்த அனைவருக்கும் நன்றி!

# உள்ளே.....

- ஃபெட்னா போட்டிகளின் முடிவுகள் 2020-2021 பங்கேற்பாளர்கள்
- சித்திரம் பேசுதடி
- கதை நேரம் -
- பாடிப்பழக -
- வார்த்தை விளையாட்டு
- செய்திகள்

# ஃபெட்னா செய்யுள் போட்டி-2021

1.ஷ்ரதா ஹரிஹரன்
(முதல் இடம்)



2.மித்ரா வசந்தன்
(இரண்டாம் இடம்)




3.அனில் கண்ணன்
(மூன்றாம் இடம்)



# ஃபெட்னா தமிழ் தேனீ-2021

ஃபெட்னா தமிழ் தேனீ 2021 நமது தமிழ் பள்ளி இரண்டாம் இடம் பெற்றவர்கள்

***சஞ்சய் ராஜேஷ், மித்ரா வசந்தன் நிலை -2***




***ஓவியா ரகுபதி, திவ்யா குமார்- நிலை -4***



# ஃபெட்னா குறள் தேனி-2021

1. ஷ்ரதா ஹரிஹரன்



**2. மித்ரா வசந்தன்**



# பெட்னா போட்டிகளில் இறுதி சுற்றில் கலந்து கொள்பவர்கள் பட்டியல் கீழே

## ஓவிய போட்டி



**ஷ்ரதா ஹரிஹரன்**

## பெட்னா போட்டிகளில் இறுதி சுற்றில் கலந்து கொள்பவர்கள் பட்டியல் கீழே

**நடன போட்டி**

திவ்யா குமார், ஓவிய ரகுபதி, சந்தியா குமார்






# சித்திரம் பேசுதடி..



சஞ்சனா-
நிலை-5

ஸ்ரீத்திக் சங்கர்
நிலை-4



# சித்திரம் பேசுதடி..



ரியா சங்கர்-
முன் மழலை

மாதினியா ரகுபதி
நிலை-4






ஸ்ரீஓம்
நிலை-6

கதை நேரம்

# யாதும் ஊரே யாவரும் கேளிர்

அந்த ஊருக்கு அப்போதுதான் ஒரு வட இந்திய குடும்பம் பஞ்சம் பொழைக்க வந்து இருந்தது.

"ஏன்டா மணி, யாருடா இவன். பாக்க இந்திக்காரன் மாதிரி இருக்கான்" என்று கேட்டான் சேகர்.

"அவரு பேரு ராம்சிங். வடக்க இருந்து பஞ்சம் பொழைக்க இங்க வந்து இருக்காங்க. நம்ம பஞ்சாலைல காவலாளியா வேல செய்ய வந்து இருக்காரு" என்று சொன்னான் மணி.

"என்னது நம்ம பஞ்சாலைலயா? இவனுங்க எல்லாம் இங்க வேலைக்கு வந்தா நம்ம ஊரு ஆளுங்க கதி?" என்று கோபப்பட்டான் சேகர்.

"அட பாவும்பா. பொழப்பு தேடி வந்து இருக்காரு. என்னதான் இருந்தாலும் வந்தாரை வாழவைக்கும் ஊரு இல்லையா" என்றான் மணி.

"இப்படியே சொல்லி சொல்லித்தான் கட்டிட வேலையில இருந்து காவலாளி வேலை வரைக்கும் வடக்க இருந்து வந்துட்டானுங்க. கூடிய சீக்கிரம் இவன ஒரு வழி பண்ணுறேன் பாரு" என்று சொல்லி விட்டு அங்கு இருந்து நகர்ந்து சென்றார்கள்.

கதை நேரம்

சேகர் பஞ்சாலையில், ராம்சிங்குக்கு தொடர்ந்து பல தொல்லைகள் கொடுத்து வந்தான். ஆனால் ராம்சிங் எதையும் பொருட்படுத்தாது அவனது வேலையை மட்டும் பார்த்து வந்தான். சில மாதங்கள் உருண்டு ஓடின. ராம்சிங் அந்த ஊர் மக்களிடம் நல்ல பெயர் பெற்றான். இதை பொறுக்காத சேகர் ஒரு சதி திட்டம் தீட்டினான்.

ஓர் இரவு ராம்சிங் பஞ்சாலையை காவல் காத்து கொண்டிருந்தபோது, சேகர் தனது நண்பர்கள் சிலருடன் பஞ்சாலையின் பின் புறமாக உள்ளே சென்று அங்கிருந்த சில பஞ்சு மூட்டைகளை திருடி சென்றான். மறுநாள் பஞ்சாலையின் முதலாளி, காணாமல் போன மூட்டைகளுக்கு ராம்சிங்தான் பொறுப்பு என்று அவனை வேலையை விட்டு அனுப்பிவிட்டார். சேகரின் திட்டமும் வெற்றி பெற்றது.

வேலை இழந்த ராம்சிங், வேறு வேலை கிடைக்காமல் அந்த ஊரின் இரவு நேர காவலாளியாக ரோந்து பணியில் ஈடுபட்டான். அவனுக்கு அந்த ஊர் மக்கள் ஆதரவு தந்து அவன் அன்றாட வாழ்க்கைக்கு உதவினார்கள். இதனால் மேலும் ஆத்திரம் அடைந்த சேகர் மற்றொரு சூழ்ச்சி செய்தான். பக்கத்து ஊரில் இருந்து சில திருடர்களை வரவழைத்தான்..

கதை நேரம்

அவர்களிடம், ஊரில் இன்று இரவு அனைவரும் தூங்கிய பிறகு, ராம்சிங் ரோந்து பணியில் இருக்கும் போது, ஒரு சில வீடுகளை கொள்ளை அடிக்க சொன்னான். அதன் மூலம் ராம்சிங்கின் பெயரை கெடுத்து, ஊரை விட்டு விரட்டி விட திட்டம் தீட்டினான். திருடர்களை பகலிலேயே வரவழைத்து, சேகர் தன் வீட்டில் தங்க வைத்தான்.

ஆனால் தன் வினை தன்னை சுடும் என்பது போல, அந்த திருடர்கள் வேறு ஒரு சூழ்ச்சி செய்தனர். அதில் ஒருவன் "ஊருக்குள்ள போய் வேற வீட்ல கொள்ளை அடிக்கிறதா விட இந்த சேகர் வீட்லயே கொள்ளை அடிச்ச என்ன? நமக்கு வசதியா அவன் வீட்லயே இருக்கோம். அவனும் நம்மள நம்புறான். நடுராத்திரி ஆன உடனே வேலைய ஆரம்பிச்சிடலாம். என்ன சொல்லுறீங்க?" என்று கேட்டான். அதற்கு அனைவரும் சம்மதம் தெரிவித்தனர்.

இரவு பன்னிரெண்டு மணி ஆனதும், சேகர் அவர்களை கொள்ளை அடிக்க போக சொன்னான். அதில் ஒருவன், சேகர் சற்றும் எதிர்பாராத விதமாக அவன் கைகளை பிடித்து அமுக்கி தரையில் தள்ளினான். விபரீதத்தை உணர்ந்த சேகர், கூச்சலிட்டான். அப்பொழுது ரோந்து பணியில் இருந்த ராம்சிங், சேகரின் அலறல் சத்தம் கேட்டு, அவன் வீட்டுக்குள் சென்றான்.

கதை நேரம்

அங்கு இருந்த திருடர்களை ராம்சிங் பந்தாடினான். இருப்பினும் அதில் ஒருவன் ராம்சிங்கை கத்தியால் குத்த, ராம்சிங் நிலை தடுமாறி கீழே சரிந்தான். அச்சத்தில் திருடர்கள் அனைவரும் ஓடி விட்டனர்.

கீழே சரிந்து கிடந்த ராம்சிங்கை, சேகர் தன் மடியில் படுக்க வைத்தான். ராம்சிங் உயிர் பிரிவதற்கு முன், ஏதோ சொல்ல வருவதுபோல அவன் கண்களில் தெரிந்தது. ஆனால் அதற்கு முன் அவன் உயிர் பிரிந்தது

ஆம், அவன் சொல்லாத அந்த வார்த்தைகள் சேகரின் காதுகளில் ஒலித்து கொண்டே இருந்தது.

"யாதும் ஊரே யாவரும் கேளிர்"

உலகில் உள்ள அனைத்து புலம் பெயர்ந்து வாழும் மக்களும், அந்த ராம்சிங் போன்றவர்கள்தான். அவர்களுக்கான அன்பு, பாசம், பரிவு, மரியாதை மற்றும் வாய்ப்பு என்றென்றும் கிடைக்க பெற வேண்டும்.

-சுதாகர் ரத்தினம்

# விளையாடு வினையாக்கு!

விடுபட்ட வார்த்தைகளை கண்டுபிடிக்க

**திருக்குறள்**

1.அன்பிலார் எல்லாம் தமக்குரியர் -----
என்பும் உரியர் --------

2.இனிய உளவாக இன்னாத -------
கனிஇருப்பக் ------- தற்று



# விளையாடு வினையாக்கு!

## விடுகதைகள்

கீழே உள்ள விடுகதைகளை கொண்டு விடைகளை கண்டு பிடிக்கவும்

1. அந்திவரும் நேரம், அவளும் வரும் நேரும் அது என்ன?
2. பூமியிலே பிறக்கும், புகையாய்ப் போகும். அது என்ன?
3. இரவும் பகலும் ஒய்வு இல்லை, படுத்தால் எழுப்ப ஆள் இல்லை அது என்ன?
4. ஆகாயத்தில் பறக்கும். அக்கம் பக்கம் போகாது. அது என்ன?

சென்ற இதழ் புதிர் விடைகள்

1.பட்டம்
2.இஸ்திரிபெட்டி
3.மின்விசிறி

விடைகளை kathiravanp@yahoo.com Pradeekutty@yahoo.co.in என்ற முகவரிக்கு மின்அஞ்சல் அனுப்பவும். சரியான விடை அளிப்பவருககு ஒரு ஆச்சரியம் காத்துக் கொண்டிருக்கிறது

## பாட்டு பாடிப் பழக:




This Photo by Unknown Author is licensed under CC BY-SA-NC

# செய்திகள்

வகுப்புகள்:

- வகுப்புகள் 8/22 (ஞாயிற்றுக்கிழமை) தொடங்கி 2PM முதல் 4PM வரை இருக்கும்.
- அடுத்த 90 நாட்களுக்கு பள்ளி ஆன்லைனில் இருக்கும்
- ஏதேனும் பள்ளிச் செய்திகளுக்கு உங்கள் குழுக்களின் பொது விவாத வாரியத்தைப் பார்க்கவும்.
- அடுத்த 90 நாட்களுக்கு பள்ளியின் முறை பற்றிய கணக்கெடுப்பு எடுத்த அனைவருக்கும் நன்றி.

இதழை மேலும் சிறப்பிக்க உங்கள் உதவி மிகவும் அவசியம். உங்கள் கருத்துக்களையும், குறிப்புகளையும் மின்னஞ்சல் வழியாக தெரிவிக்கவும்.

மின்னஞ்சல் தொடர்பு:
Pradeekutty@yahoo.co.in
kathiravanp@yahoo.com